உலகப்
பிரசித்திபெற்ற
தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக் குணமளிக்கும்

பெப்ஸ் வில்லைகளை உட்கொண்டதால், பிராங்கைடிஸ் விரைவில் அகன்றது

தொண்டை, மார்பு உபாதைகளுக்கான பெப்ஸ் வில்லைகளை உட்கொண்டு தொண்டைப் புண், ப்ராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷத்தை சீக்கிரம் நிவர்த்தி செய்து கொள்ளுங்கள். பெப்ஸ் வில்லைகளைச் சுவைத்து, குணமளிக்கும் ஆவி போன்ற அதன் சத்து வேலை செய்வதை உணருங்கள் . . . வேதனையைக் குறைக்கவும் கிருமிகளை அகற்றவும் உதவியளிக்கிறது.

பெப்ஸ்

தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணம் அளிக்கும்
வில்லைகள்

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

ஸி. இ. புல்போர்ட (இந்தியா) பிரைவேட் லிட்.

முப்பத்துமூன்றுவது ஆண்டு

கலைமகள்

தொகுதி கக
பகுதி ககூடு

குரோதி ஹ
கார்த்திகை மீ

நவம்பர் 1964

குறுநாவல்

மனிதனும் ஜோதியும் - ராஜம் கிருஷ்ணன் 547

கட்டுரை

பாரதப் பிரதமர் சாஸ்திரி - கே. ஸ்ரீனிவாஸன் 476
திருவொற்றியூர் - ரா. நாகசுவாமி 481
நிழலில் குடை பிடிக்கும் பெண்கள் - வி. எஸ். நம்பூதிரிபாடு 484
கால் தளர்வு நோய் - வை. தா. ஜா. 491
விஞ்ஞானமணி சி. வி. ராமன் - டாக்டர் நீ. ரா. ஸ்ரீநிவாஸன் 531
போரில் படைகள் - எஸ். கே. நாராயண ஐயர் 535
இங்கிலாந்தில் கல்வி வளம் - ஏ. சரஸ்வதி 574

சிறுகதை

சம்மானம் - வாசவன் 485
எனக்காக - சுந்தரி ஜயராமன் 507
அருணோதயமாயிற்று - சேஷநாராயண 515
சுபாவம் - ரஸவாதி 523

தொடர்கதை

பொன் மலர் (11) - அகிலன் 497
துள்ளும் உள்ளம் (16) - மாயாவி 537

கவிதை

பயணம் - இளம்பாரதி 475

தனிப் பகுதி

மலர் மலர்ந்தது 471
தாயுமானவர் கோயில் திருப்பணி 473
இது பதில் - விடையவன் 528
அட்டைப் படம்: 'இம்புட்டு மீனுக்கா இந்நேரம்!'

வெளியாகும் கதைகளிலுள்ள

கலை மகள்

பயணம்

இளம்பாரதி

நூற்களின் இதழ்களைப் புரட்டியதால்—விரல்
நுனிகளில் அறுபவம் சேரவில்லை.
ஊற்றுக்கள் பற்பல கடந்துவந்தும்—அங்கே
ஊறிய நீரினைப் பருகவில்லை. (1)

விண்ணிடை அற்புதம் கண்டிருந்தும்—அதை
விளக்கிடும் வித்தைகள் கற்கவில்லை.
மண்ணிடை எத்தனை நாள்நடந்தும்—அதன்
வழிகளைத் தேர்ந்திடத் தெரியவில்லை. (2)

கண்டது நிலவெனத் தெளிந்திருந்தும்—அதன்
கறைநிழல் ஏனெனத் தெளியவில்லை.
கண்டதும் விண்டதும் ஏற்றிருந்தும்—உள்ளே
காரண காரியம் புரியவில்லை. (3)

நொண்டியாய்ப் பயணமும் எத்தனைநாள்?—மன
நுணுக்கத்தை ஆய்ந்திட எத்தனைநாள்?
அண்டிய உலகினைக் கைப்பிடிக்குள்—நிறை
அடங்கிடச் செய்திட எத்தனைநாள்? (4)

என்னையும் விண்ணையும் சேர்த்தளித்த—அன்னை
இயற்கையின் மடியினில் தவழ்ந்திருந்து
பின்னெரு நாளினில் அவ்வுறவால்—கற்றுப்
பிறந்திடும் உத்தியால் வழிதொடர்வேன். (5)

உண்மைகள் யாவிலும் எனையிணைத்தே—எழில்
உலகிடை ஒன்றிட வலம்வருவேன்.
மண்ணிடை விண்ணிடை அற்புதங்கள்—எலாம்
மனத்திடை ஏற்றுநான் வழிதொடர்வேன். (6)